## பிப்ரவரி, 2017 – எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- நீர்ப்பாசன வசதியுள்ள எண்ணெய்ப்பனை தோட்டங்களில், உரங்களை 3 மத இடைவெளியில், வருடத்திற்கு 4 முறை இட வேண்டும்.

- எண்ணெய்ப்பனையின் வட்டப்பாத்தியை களைகளை நீக்கி சுத்தம் செய்து, உரக்கலவையை தூவி, ஏதேனும் போர்க் (அ) குச்சி கொண்டு மண்ணுடன் நன்றாக கலக்க வேண்டும். உரம் வைத்து உடனுக்குடன் நீர்ப்பாய்ச்சுவது அவசியம்.

- புதிதாக நடவு செய்த எண்ணெய்ப்பனை தோட்டங்களில், நடவு செய்த 3 மாதத்தில் உரமிட வேண்டும். இரண்டாம் தவணை உரமிடும் போது ஏக்கருக்கு 50-100 கி தொழு உரம், 100 கி பசுந்தாள் உரம் கலந்து இட வேண்டும். பனை ஒன்றிற்கு 5 கி வேப்ப புண்ணாக்கும் கலந்து இடலாம். தொழு உரம் நன்கு மக்கியதாக இருப்பது மிக முக்கியம்.

- எண்ணெய்ப்பனையில், முதல் மூன்று வருடத்தில் மஞ்சரிகளை நீக்குவது மிக முக்கியம். இவ்வாறு நீக்குவதால், பனையின் தண்டு மற்றும் வேர் நன்கு வளர்ச்சியடையும்.

- 12 - 14 மாதங்களான, 1-1.3 மீ உயரம், 13 ஆரோக்கியமான இலைகள் கொண்ட எண்ணைய்ப்பனை கன்றுகளை குழிகளில் நடவு செய்ய வேண்டும்.